

சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு 38, 39 பகுதிகளுக்கு செட்டிக்கார மண்டபத்தில் நேற்று (22.07.2025) நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் இளங்கோவன், அம்மாபேட்டை மண்டல உதவி ஆணையர் வேடியப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலம்!

## தொலைபேசியில் பிரதமர் மோடி – எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி – சூப்பர்ஸ்டார் ரஜினி காந்த் – கட்சித் தலைவர்கள் – திரையுலகினர் நலம் விசாரித்தனர்!

**சென்னை, ஜூலை 23–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (21.7.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதையடுத்து, அவரது உடல்நலம் குறித்து தொலைபேசி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், முக்கிய அரசியல் தலைவர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைதொடர்புகொண்டுநலம்விசாரித்தனர்.**

### ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில்

# தீண்டாமை உள்ளிட்ட பாகுபாடுகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் நிலவும் தீண்டாமை உள்ளிட்ட பாகுபாடுகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (21-07-2025) எழுத்துப் பூர்வமான கேள்விகளை எழுப்பினார்.



"உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில், யு.ஜி.சி. விதிமுறைகள் 2012 இன் படி ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் Equal Opportunity Cells எனப்படும் சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளை உருவாக்கிய மத்திய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? இல்லையென்றால், சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப்படாததற்கான காரணங்கள் என்ன?

ஒன்றிய அரசின் கல்லூரி பல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு காட்டப்பட்ட சம்பவங்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா?

அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக் கழக வாரியாக எத்தனை? தரவுகள் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

பாகுபாடுகளை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகம் அல்லது அரசு வழங்கிய உதவிகள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் கூடுதல் வழிமுறைகளை வகுக்க, திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?"

ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.

**ஒன்றிய கல்வி அமைச்சர் பதில்!**

இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணையமைச்சரான டாக்டர் சுகந்தா மஜூம்தர் அளித்துள்ள பதில் வருமாறு :-

"ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்துக்கு உட்பட்ட 48 மத்திய பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்துகிற Equal Opportunity Cells எனப்படுகிற சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட சட்டப் பூர்வ தன்னாட்சி அமைப்புகளாகும்.

மேலும் அந்தந்த பல்கலைக் கழகங்கள் அவற்றுக்கென உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒன்றிய கல்வி அமைச்சகமும், யுஜிசியும் உயர் கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடுக்கவும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மத்திய பல்கலைக் கழகங்களில் பாரபட்சம், பாகுபாடு உள்ளிட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி வலைத் தளங்கள் அல்லது புகார் பதிவேடுகள் மூலம் புகார்களை பதிவு செய்வதற்கான வழிமுறைகளை நிறுவப்பட்டுள்ளன.

SC/ST/OBC மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களிடமிருந்து பெறப்படும் பாகுபாடு குறித்த புகார்களில், தவறு செய்யும் நபர்கள் மீது உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் குறை தீர்க்கும் குழுக்களை (SGRCs) அமைத்தல் மற்றும் குறை தீர்ப்பு அதிகாரிகளை நியமித்தல், சமவாய்ப்பு குழுக்களை நிறுவுதல், மாணவர்களுக்கு கவுன்சிலிங் மையங்கள் மூலம் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மேலும் உயர் கல்வி நிறுவனங்களில் ராகிங் மற்றும் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன".

இவ்வாறு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.

### என்னைப் போல் மேலும் பலர் விலகுவர்!

# எடப்பாடியினால் அ.தி.மு.க. சரிவைச் சந்திக்கும் !

## கழகத்தில் இணைந்த அன்வர் ராஜா பேட்டி!

**சென்னை, ஜூலை 23-**

**"அ.தி.மு.க.விலிருந்து என்னைப் போல் மேலும் பலர் கட்சியிலிருந்து விலகுவர்" என்றும் "எடப்பாடியினால் அ.தி.மு.க. சரிவைச் சந்திக்கும்" என்றும் கழகத்தில் இணைந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா கூறியுள்ளார்.**



அண்ணா அறிவாலயத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நான் என்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டு இருக்கிறேன். இதற்கு பல காரணங்கள் உள்ளன. கருத்தியல் ரீதியாக தி.மு.க.வுக்கும், எனக்கும் எப்போதுமே தொடர்புகள் உண்டு.

இப்போது பாரதீய ஜனதா கட்சியின் கைகளில் அ.தி.மு.க. சிக்கி உள்ளது. பா.ஜ.க. தலைவர்கள் தொடர்ந்து தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று பேசி வருகிறார்கள். மத்திய மந்திரி அமித்ஷா 3 தடவை இது தொடர்பாக பேட்டியளித்தார்.

ஆனால் அவர் ஒரு தடவை கூட தமிழகத்தில் 2026ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றதும் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர் ஆவார் என்று சொன்னதே இல்லை. எடப்பாடி பழனிசாமி கடந்த 10 நாட்களாக சுற்றுப் பயணம் செய்து கொண்டு இருக்கிறார். அமித்ஷாவின் பேட்டிக்கு அவரால் வெளிப்படையாக நான்தான் முதலமைச்சர் என்று சொல்ல இயலவில்லை.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியால் அ.தி.மு.க.வுக்கு தான் மிகப் பெரிய அழிவு ஏற்படும். பா.ஜ.க. தலைவர்கள் திட்டமிட்டு அ.தி.மு.க.வை அழித்து விடுவார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டணி வைத்துக் கொள்ளும் கட்சிகளை அழிப்பதை பாரதீய ஜனதா வாடிக்கையாக வைத்து உள்ளது.

பாரதீய ஜனதாவின் இந்த அரசியல் இன்னமும் நிற்கவில்லை. தமிழகத்திலும் தொடர்கிறது. அவர்களால் அ.தி.மு.க. அழியும் நிலைக்குச் செல்கிறது. இதற்கு மற்ற மாநிலங்களில் பா.ஜ.க. நடந்து கொண்ட விதத்தையே உதாரணமாக சொல்ல முடியும்.

ஜெயலலிதா இருந்த போதும் பாரதீய ஜனதா 'கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்து இருந்தது. ஆனால் அப்போது அ.தி.மு.க.வை பார்த்து பா.ஜ.க. வினர் பயப்பட்டனர். மத்தியில் பா.ஜ.க. ஆட்சியை கலைத்து விட்டு ஜெயலலிதா கம்பீரமாக வந்தார்.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக உள்ளது. பா.ஜ.க. தலைவர்களை பார்த்து அ.தி.மு.க.வினர் பயப்படுகிறார்கள். அ.தி.மு.க.வின் அழிவுக்கு இதுதான் தொடக்கமாக அமைந்துள்ளது. அ.தி.மு.க.வில் என்னை போலவே இன்னும் பலர் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். அவர்களது கருத்துக்கள் எடுபடவில்லை. இதனால் 2026ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெறாது.

அழிவை நோக்கிதான் செல்லும். எடப்பாடி பழனிசாமி வீட்டில் சமீபத்தில் முன்னாள் அமைச்சர்கள் அவரை சந்தித்து அ.தி.மு.க.வை மீண்டும் வலிமைப்படுத்துவதற்கு சில யோசனைகளை தெரிவித்தனர். ஆனால் எடப்பாடி பழனிசாமி அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர் எதையுமே ஏற்றுக் கொள்ள மாட்டார். இதனால் என்னை போல மேலும் பலர் விலகுவார்கள். இதனால் அ.தி.மு.க. எதிர்காலம் இல்லாமல் சரிவை சந்திக்கும்.

இவ்வாறு அன்வர்ராஜா கூறினார்.

### சிவகாசி – நாரணாபுரத்தில் பட்டாசு ஆலை வெடி விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 21.07.2025 அன்று பிற்பகல் சுமார் 3.50 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கீழத்திருத்தங்கல், முத்துராமலிங்கம் காலனியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 23) த/பெ.தங்கராஜ் மற்றும் இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.நாகலட்சுமி (வயது 55) க/பெ.முனியசாமி, திருமதி.மாரியம்மாள் (வயது 53) க/பெ.முத்துவேல் மற்றும் திருமதி.மாரியம்மாள் (வயது 50) க/பெ.தங்கராஜ் ஆகிய மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மும்மொழிக் கொள்கை அமல்:

# மாநில அரசுகளே முடிவு செய்யலாம்!

## ஒன்றிய அரசு பின் வாங்கியது!

புதுடெல்லி, ஜூலை 23-

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவதை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே முடிவு செய்து கொள்ளலாம் என ஒன்றிய அரசு பின்வாங்கி உள்ளது.

மக்களவையில், காங்கிரஸ் கொறடா மாணிக்கம் தாகூர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வித்துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி எழுத்து மூலம் பதிலளித்தார்.

அதில், கல்வி ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ளதால், மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவதை அந்தந்த மாநில அரசுகள் நெகிழ்வான முறையில் முடிவு செய்ய வேண்டும் என்றும், மாநிலத்தின் தேவை, பன்முகத்தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இதனை அமல்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்மொழிக்கொள்கையை அமல்படுத்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், ஒன்றிய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. அவர்களின் ஆலோசனைப்படி விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் தெற்கு ஒன்றியம், கீழக்கொண்டூர், வீரசோழபுரம் ஆகிய ஊராட்சிகளில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கையை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.லூயிஸ், ஜி.ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அறிவழகன், ஒன்றிய கவுன்சிலர் சேகர், ஊராட்சி மன்றத் தலைவர் பார்த்திபன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் புஷ்பராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் தொடர்ந்து பின்தங்கி வருகிறது!

# தனிநபர் வருமானம் தமிழ்நாட்டில் அதிகரிப்பு !

## கர்நாடகா, கேரளாவிலும் அதிகரிப்பு!

புதுடெல்லி, ஜூலை 23-

நாட்டின் தனிநபர் வருமானத்தில், தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் இருப்பதாக ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள தரவுகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தனிநபர் வருமானத்தில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் தொடர்ந்து பின்தங்கி வரும் நிலையில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா போன்ற தென் மாநிலங்களில், தனிநபர் வருமானம் அதிகரித்து வருவது தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளார். அதில், புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தேசிய புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தற்காலிக மதிப்பீடுகளின் படி, 2024-2025ம் ஆண்டுக்கான நிலையான விலையில், தனிநபர் நிகர தேசிய வருமானம் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 710 ரூபாயாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் வருமானம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையில் மாறுபடும் என்றும், இது பொருளாதார வளர்ச்சியின் நிலைகள், துறைசார் அமைப்பு, கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிர்வாக வழிமுறைகளில் உள்ள வேறுபாடுகள் போன்ற பல்வேறு காரணிகளால் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள மாநிலமாக கர்நாடகா திகழ்வதாகவும், அங்கு, 2024-2025ம் ஆண்டு தனிநபர் வருமானம் 2 லட்சத்து 4 ஆயிரத்து 605 ரூபாயாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்தில் தமிழ்நாடு இருப்பதாகவும், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 309 ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிநபர் வருமானத்தில் பா.ஜ.க. ஆளும் வட மாநிலங்கள் தொடர்ந்து பின்தங்கி வரும் நிலையில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா போன்ற தென் மாநிலங்களில், தனிநபர் வருமானம் அதிகரித்து வருவது தெரிய வந்துள்ளது.